# பிரத்தியேக நாட்குறிப்பொன்றில் இருந்து...

லக்ஷ்மி



**19.11. 2006 - ஞாயிற்றுக்கிழமை**
*கலைவண்ணம் 2006 - திருமறைக்கலாமன்றம்*
*பாரிஸ்*

**20.11.2006 - திங்கட்கிழமை**
*குழந்தைகள் உரிமை தினம்*
*பிரான்ஸ்*

இது குறித்து இன்று பிரான்ஸில் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளில்:

குறிப்பாக, பெற்றோரின் விவாகரத்தினால் குழந்தைகளின் மனநலம் பாதிக்கப்படுகின்றது. அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட வேண்டும். அந்தக் குழந்தைகள் பெற்றோர்களின் உறவினர்களுடன் சகஜமாக பழகுவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இது போன்ற பரிந்துரைப்புகள். குழந்தைகளின் மனநலம் எப்படி எப்படிப் பாதிக்கப்படும் என்ற ஆராய்ச்சிகள் பல்வேறு விதமாக பல வடிவங்களில் நடந்து கொண்டும், தொடர்ந்து கொண்டும் இருக்கின்றன. இதுபற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகளில் இருந்து மட்டும்தான் கருத்துச் சொல்ல முடியும் என்று நான் நம்பவில்லை.

**20.11.2006 - திங்கட்கிழமை**
**அதிகாலை 2.00மணி**
**பாரிஸ்**

இப்போது மூன்று மணித்தியாலங்களிற்கு முன்பாக திருமறைக்கலாமன்றத்தின் கலைவண்ணம் 2006இன் கலைநிகழ்ச்சிகளைப் பார்த்துவிட்டுத் திரும்பி இருக்கிறேன். அதாவது, 19.11.2006 ஞாயிற்றுக் கிழமையன்று கலைவண்ணம் நிகழ்ச்சிகள் பாரிஸில் நடைபெற்றன. பாரிஸில் திருமறைக் கலாமன்றம் தனது தொடர்ந்த செயற்பாட்டில் நாடக வளர்ச்சிக்கு (நாடகங்களை மேடையேற்றுவதில்) பிரத்தியேக கவனத்தைக் குவித்துச் செயற்பட்டுவருகின்றது என்பதும், திருமறைக் கலாமன்றம் மேடையேற்றும் நாடகங்கள் ஓரளவு பிரக்ஞையுடன் செய்யப்படுகின்றன என்னும் ஒரு எண்ணத்தை எனக்குள் ஏற்படுத்தி இருக்கின்றது என்பதும், அதனால் தவிர்க்க முடியாத காரணங்கள், தடங்கல்கள் இருந்தாலன்றி, அவர்களின் நிகழ்ச்சிகளைத் தவறவிடுதில்லை. இந்தத் தொடர்ச்சியில்தான், நேற்று அவர்களின் கலைநிகழ்ச்சிக்குச் சென்று திரும்பி இருக்கின்றேன். பிரான்ஸில் நிகழும் புகலிடத் தமிழர்களின் ஏனைய நிகழ்ச்சிகள் போலல்லாது மற்றவர்களின் நேரம் குறித்து விசேட பிரக்ஞை கொண்டிருப்பவர்கள். அந்த வகையில் நிகழ்ச்சி அவர்கள் குறிப்பிட்டிருந்தபடியே மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி விட்டது. நான் அரை மணி நேரம் கழித்துத்தான் சென்றேன். நிகழ்ச்சிகள் ஆரம்பித்துவிட்டபடியால் அரங்கில் வெளிச்சம் குறைவாக இருந்தது. ஒரு மாதிரித் தட்டித் தடவி ஒரு இருக்கையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தேன்.

சங்கீதம், கவிதா நிகழ்வு, நாடகம், கௌரவிப்பு, அஞ்சலி, நடனம் என்று நிகழ்ச்சிகளின் பட்டியல்.

நிகழ்ச்சிகள் முடிவதற்கு ஒரு அரைமணித்தியாலத்திற்கு முன்பு வெளியே வந்துவிட்டேன். வரும்வழியில்

நண்பர்களுடன் நான் பேசிக் கொண்டு வரும்போது மற்றவர் களின் அபிப்பிராயத்தில் "பாட்டு நன்றாக இருந்தது. கவிதைகள் பரவாயில்லை...." இதெல்லாம் இருக்க, என்னை ஆத்திரப் படுத்திய அல்லது உணர்ச்சி வசப்படுத்திய நிகழ்வும் ஒன்று அங்கே இருந்தது.

மண்டபத்தை விட்டு வெளியேற முன்னேறுகையில் எதிர்ப்பட்ட நண்பர் ஒருவர் "எப்படி நிகழ்ச்சியெல்லாம் பிடிச்சுதோ?" என்று கேட்டார். "ஓம் பிடிச்சுது. பிறகு சந்திப்பம்" என்று சொன்னபடியே நகர்ந் தேன். ஆனால், "என்னால் அதற்கு மிஞ்சியும் இருக்க முடியாமல் பக்கத்தில் இருந்த நண்பியையும் இழுத்துக் கொண்டு போகிறேன்" என்று அந்தக் கூட்டத்தில் வைத்து அவரிடம் சொல்ல முடிந்திருக்கவில்லை.



இந்தக் குறிப்பை எழுதும்போது, இப்படியும் ஒரு யோசனை தோன்றுகிறது. நடந்த நிகழ்வு குறித்த நல்ல விடயங்கள் எதையும் எழுதாமல் இதை மட்டும் எழுதுகிறேனோ என்று. ஆனால் எனக்கென்ன தோன்றுகின்றதென்றால் நல்ல விடயங்கள் என்று படுபவைகளை நான் சொன்னால் என்ன, சொல்லா விட்டால் என்ன தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கப் போகின்றது. அப்படியென்றால் நல்லதில்லை என்று சொல்லும் விடயங்கள் மட்டும் என்ன நான் எழுதுவதனால் மாறிவிடுமா என்று. எதுவும் மாறாது என்ற நம்பிக்கை திட்டவட்டமாக என்னிடம் இல்லா திருப்பதானால் இதனைச் சொல்வதன் அவசியத்தை நான் உணருகின்றேன். பெண் குழந்தைகள் - சிறுமிகள் - பெண்பிள்ளைகள் - பெண்கள் - பாலியல் துஷ்பிர யோகம் இச்சொற்பதங்கள் இந்த நிகழ்ச்சி அக்கணம் மனவீச்சில் எழுப்பிய அலைகளில் மிதந்தவை.

இந்த இடத்தில் எனக்கு முக்கியமான சம்பவம் ஒன்று ஞாபகத்தில் வருகின்றது. கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு சந்திப்பொன்றில், "இங்கு வாழும் வளருகின்ற பிள்ளைகளுக்கு பாலியல் ரீதியான உறவுகள் பற்றியும் அவர்களுடைய உடல் ரீதியாக ஏற்படுகின்ற மாற்றங்கள் பற்றியும் பெற்றோர் கள் தெளிவாகக் கதைக்க வேண்டும். பிள்ளைகள் அதுபற்றிய சந்தேகங்களைப் பெற்றோரிடம் இருந்து தெரிந்து கொள்வதற்கு அனுகூலமான சம்பாஷணைப் போக்கை பெற்றோர் - பிள்ளைகள் உறவு கொண்டிருக்க வேண்டும். இவைகள் பற்றி விரிவாகப் பேசாது இருப்ப தனால் பிள்ளைகள்மீது பெற்றோர்கள் சந்தேகம் கொள்ளுதல், பூடகமாகப் பேசுதல், அளவுக்கதிகமான கண்டிப்பு என்பன நிகழ்கின்றன. அத்துடன் வளரும் பிள்ளைகள் வெளியில் கொள்ளக்கூடிய உறவுகளி னால் பாதிக்கப்படுவது பெண்பிள்ளைகளாக இருப்பது தான் அதிகம். பாலியல் பற்றிய கல்வியைப் பெற்றோர் கள் அதனை ஒரு மந்திரப்பொருளாக்காது இயல்பாகப் பேசிக்கொள்ளவேண்டும். அப்போதுதான் அவர்கள் பாது காப்பான உறவை ஏற்படுத்திக் கொள்வார்கள்."

இப்படி ஏன் அந்தச் சந்திப் பில் நான் சொல்லவேண்டி வந் ததென்றால், அந்தக் கூட்டத்தில் பேசிய ஒரு நண்பர் "வெளி நாட்டுக் கலாச்சாரச் சூழல் சரியில்லாததால் பெண்பிள்ளை கள் திடீரென்று வயிற்றில் பிள்ளையுடன் வந்து நிற்கின் றார்கள். பெற்றோர் என்ன செய்வ தென்று தெரியாமல் முழிக்கின் றார்கள். சிலவேளைகளில் இப்படி நடக்கும் சம்பவங்களின் பின் பெற்றோரின் அவமதிப்புத் தாங்க முடியாமல் அப் பெண் பிள்ளைகள் தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபடு கின்றார்கள்" என்று கவலைப்பட்டார். இந்தக் கூற்றுக்குப் பின்தான் என்னுடைய வெளிப்பாடு மேல்வருமாறு அமைந்தது. அப்போது சந்திப்பில் கலந்துகொண்டிருந்த ஒரு பெண் என்னை நோக்கி "அப்ப என்ன! எங்கடை பொம்பிளைப் பிள்ளையளுக்கு எப்பிடிப் படுக்கிறதெண்டு இப்பவே சொல்லிக் குடுக்கச் சொல்லுறியளோ? இதென்ன அநியாயம்!" என்று சீறிப் பாய்ந்தார். "அவர்கள் எப்படிப் படுக்கக் கூடாதென்று சொல்வதுதான் எனது நோக்கம்" என்பதை அந்தக் கூட்டத்தில் என்னால் புரிய வைக்கக்கூடிய வல்லமை என்னிடம் இருக்கவில்லை என்பதை நான் ஒத்துக் கொண்டேதான் ஆகவேண்டும்.

எந்த விடயங்கள் பற்றியும் தெளிவான விளக் கங்கள் இருப்பது ஒன்றும் வரலாற்றுக் குற்றமில்லை என்பதில் எனக்குத் தெளிவு இருக்கின்றது.

பெண்களின் ஆளுமைக்கு முதல் எதிரியாக இருப்பது அவர்களுடைய உடற்கூற்றமைப்புத்தான். இதனைப் பெண்கள் மிகவும் அவதானத்துடன் கையாள வேண்டிய தேவை இருக்கின்றது.

* * *

இவைகள் எல்லாம் ஏன் இந்த இடத்தில் என் மீள்சிந்தனைக்கு வருகின்றதென்றால், நேற்றைய விழாவில் என்னைப் பாதித்த நிகழ்ச்சிதான். அந்த நிகழ்ச்சி- சினிமாப் பாடல்களுக்கு சிறுமிகள், சிறுவன்கள், பெண்பிள்ளைகள், ஆண்பிள்ளைகள் ஆடுவது. ஆடுவது என்பதை அபிநயத்துடன் ஆடுவது என்று திருத்திச் சொல்லலாம். இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி தொடங்கியபோது திரை விலக, ஒரு சிறுமி அரங்கில். சிறுமியின் அபிநயத்துடன் ஆரம்பமாகியது நடன நிகழ்ச்சி. அந்தச் சிறுமி அபிநயித்த பாடல் மிகவும் விரசமான, பால்இச்சையைத் தூண்டுவதை நோக்காகக் கொண்ட வரிகளோடு கூடியது. அச்சிறுமி அதற்குச் செய்த அபிநயத்தில் யாருமே லயித்துத்தான் போவார்கள். இந்த வரிகளைக் கொண்ட பாடலுக்கு இந்தச் சிறுமியால் எப்படி இப்படி அபிநயம் பிடிக்க

முடிந்தது என்பது எனக்கு இன்னமும் ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது. எனக்கு இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் கலாச்சாரம், பண்பாடு என்பவைகளை உன்னதமாக எண்ணிக்கொண்டு, எங்களுடைய கலாச்சாரத்தினை இங்குள்ள வெளிநாட்டுக் கலாச்சாரம் சீரழிக்கின்றது என்று பெருமை பேசும் தேசியக் கலாச்சாரப் பாதுகாவலர்கள் இதனை எப்படிச் சகித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான். அங்கு கூட்டத்தில் அந்த நடனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் பலர், பெண்களின் இடுப்பு மடிப்பில் தங்கள் இதயத்தைத் தந்துவிடுபவர்களாகத்தான் இருக்க முடியும். திரையில் சினிமாப் பாடல்களின் ஆட்டத்தின் உடல



சைவுகளின்போது தங்களை ஐக்கியப்படுத்தி உணர்ச்சிச் சிதறல்களை அனுபவிக்கும் ஆண்கள் ஏராளம். அதே உணர்ச்சிப் பெருக்கைத் தூண்ட ஒரு சிறுமியை இவர்கள் அங்கே பணயம் வைத்தது போல்தான் தெரிந்தது. (இதில் முக்கியம் என்னவாக எனக்கு இருக்கின்றதென்றால், சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்யும் சட்டத்தின்கீழ் இவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதுதான்)

பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ, ஒரு சிறுமி இந்த வயதில் கூச்சமில்லாமல் ஆடுகிறார் என்பதும், அவர் பலரின் கைதட்டல்களைப் பெறுகிறார் என்பதும்தான் முக்கியமாகப் படுகின்றதேயன்றி அதற்கப்பால் வேறெதுவும் இல்லை. அவர்கள் இதற்கு மேல் எதையும் சிந்திக்கப் போவதில்லை. ஏனென்றால், எங்கள் பிள்ளைகளின் கெட்டிக்காரத்தனத்துக்கு கைதட்டல்களையும் விருதுகளையும் பெற்றால் போதும் என்று போதையேறிப் போய்விடுபவர்கள் நாங்கள்.

பிள்ளைகள் எப்போதும் எங்களை விடக் கெட்டிக்காரர்கள் என்பதில் எனக்கு எப்போதுமே சந்தேகம் இருந்ததில்லை. ஆனால், அவர்களுக்கு சில வழிகளைச் சொல்லிக் கொடுப்பதற்கான முயற்சியைப் பெற்றோர்கள் எடுப்பதில் எந்தத் தவறுமில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

சிறுவன்கள் தமிழ் சினிமாப் படங்களில் வரும் வீர(வெட்டருவா/வீச்சருவா) வசனங்களைப் பேசும் போது பெற்றோர்கள், “தம்பி எப்பிடித் தமிழ் பேசுகிறான் கேளுங்கோ” அல்லது “அந்த திருப்பாச்சி வசனத்தை ஒருக்கா அன்ரிக்கு (மாமாவுக்கு)ச் செய்து காட்டு” என்று பிள்ளைகளின் அரங்காடலில் பூரித்துப் போகிறார்கள். தமிழ்த் திரைப்படச் சானல்கள் வீடுகளை ஆக்கிரமித்திருப்பதும், பெற்றோர்கள் இத்திரைப் படங்கள் விதைக்கும் வன்முறைகளையும் விரசங்களையும் கண்டுகொள்ளாமல் இருப்பதும் விசனத்துக்குரியதே. பின்பு சிறுவர்கள் வளர்ந்து பெற்றோர்களுடைய விருப்பத்திற்கு மாறாக எதையாவது செய்துவிட்டால், “எங்கை இருந்து இதெல்லாத்தையும் பழகிக் கொண்டு வாறாய்?” என்று பிள்ளைகளைத் திட்டுகிறார்கள். ‘பெற்றோர்கள் எப்போதும் சரியாகத்தான் இருப்பார்கள். பிள்ளைகள்தான் எப்போதும் தவறு செய்வார்கள்’ என்ற ஆதிக்க மனப்பான்மை நிலையில் இருந்துதான் இந்த முரண்பாடுகள் ஏற்படுகின்றன என்பதையும் இவர்கள் கண்டு கொள்வதில்லை. ஆனால், இந்தத் தகவல் சொரி சூழலில் தாங்கள்தான் முட்டாள்களாக இருக்கிறோம் என்றும் எத்தனையோ பெற்றோர்களுக்குத் தெரிவதில்லை.

* * * *

இந்த இடத்தில் இன்னுமொரு சம்பவமும் நினைவுக்கு வருகின்றது. அண்மையில் ஒரு நண்பனுக்கு சில சிடிக்களும், ஒரு குறிப்புப் புத்தகமும், ஒரு தமிழ்ச் சஞ்சிகையும் அனுப்பினேன்.

நான் அந்தப் பார்சலைச் சாதாரண தபாலில்தான் அனுப்பியும் அவனுக்கு அது கிடைப்பதற்கு, கிட்டத்தட்ட ஐந்து கிழமைகள் எடுத்தன. அந்த நாட்டு இரகசிய பொலிஸ் அதிகாரிகள் அந்த நாட்டுக்குள் வந்து சேரும் தகவல்கள்மீது பிரத்தியேகக் கட்டுப்பாடுகளை வைத்திருப்பவர்கள்.

இந்தப் பார்சல் அங்கு சென்று சேர்ந்ததும் அந்த சிடிக்களைப் போட்டுப் பார்த்து அந்தப் பாடல்களின் கருத்துகளைக் கேட்டார் களாம். அந்தச் சஞ்சிகையின் சில பகுதிகளைக் காட்டி விளக்கம் கேட்டார்களாம். குறிப்புப் புத்தகத்தை அல்ட்ரா வயலட் ஒளியில் பிடித்துப் பார்த்தார்களாம்.

இப்படிப் படாதபாடுபடுத்தி இறுதியில் அந்தப் பார்சலை ஒருவாறு நண்பனிடம் சேர்ப்பித்து விட்டார்கள். நண்பனும் பொறுமையாக இருந்து பார்சலைப் பெற்றுச் சென்றுவிட்டான்.

அந்த அதிகாரிகளுடன் தான் இருந்த நேரத்தில் அவர்களைப் பார்த்து மனதிற்குள் சிரித்துக் கொண்டிருந்தானாம் ‘இன்ரநெற்றில் வந்து குவியும் தகவல்களுக்கெல்லாம் இவர்கள் என்ன செய்வார்கள்’ என்று.

எனக்கும் இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால் அவனுக்கு அப்படியொரு பார்சலையே அனுப்பி இருக்கவேண்டாம் என்றிருந்தது.

* * *

என்ன சமாச்சாரமென்றால்,

நாங்கள் இப்படித்தான் சின்னச் சின்ன விடயங்களில் மயிர் பிடுங்கி, பெரிய பெரிய விடயங்களில் கோட்டை விட்டு விடுகிறோம்.